**செய்தி வெளியீடு எண்.116** **நாள்.15.12.2020**

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்**

**அலுவலக உதவியாளர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை**

சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கக அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நியமன அதிகாரி, சென்னை கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 16.12.2020 முதல் 31.12.2020 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | – | அலுவலக உதவியாளர் |
| 2 | பணியின் தன்மை | – | மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல். |
| 3 | சம்பளம் | – | ரூ.15700 – 50000/– (Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4 | வயது | – | 01.07.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |

| இனசுழற்சி முறை | அதிகபட்ச வயது வரம்பு (01.07.2020 அன்றுள்ளவாறு) |
|---|---|
| பொதுப்பிரிவு | 30 வயதுக்குள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு(முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (BC, BC(M), MBC) | 32 வயதுக்குள் |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | 35 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு | 53 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர் (Other than SC/ST/BC) | 48 வயதுக்குள் |

| | | | |
|---|---|---|---|
| மாற்றுத்திறனாளிகள் | | | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |
| 5 | மொத்த பணியிடங்கள் | | 25 எண்ணிக்கை |
| 6 | இட ஒதுக்கீடு விவரங்கள் | | |

| GT/OC | BC(M) | BC | MBC/DNC | SC | SC(A) | ST | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 7 | 5 | 4 | 1 | 0 | 25 |

| | | | |
|---|---|---|---|
| 7 | கல்வித்தகுதி | – | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் (விதி 5 (2)(a)) |
| 8 | விண்ணப்பிக்கும் முறை | – | இப்பணிக்கான விண்ணப்பங்களை www.tnhealth.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது இவ்வலுவலகத்தில் நேரிடையாகவோ வந்து சமர்ப்பிக்கலாம். |
| 9 | | | சென்னை மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும். |
| 10 | கடைசி நாள் | – | 31.12.2020 பிற்பகல் 05.45 க்குள் (காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது) |

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத்தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**